ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 1872/7 - 2014 ජූලි 22 වැනි අඟහරුවාදා - 2014.07.22
*1872/7 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வட மாகாணத்தில், கிளிநொச்சி மாவட்டத்தில், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில், கேஎன்/57, புன்னைநீராவி கிராம உத்தியோகத்தர் பிரிவில், உழவனூர் கிராமத்தில் அமைந்துள்ள, கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2013.06.27 ஆந் திகதிய கேஜ/கேஎன்டீ/2013/061 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு "ஏ" எனக் காட்டப்பட்ட சுமார் 13.8844 ஹெக்டயார்ஸ் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் :

01. **துண்டு "ஏ" - சுண்டிக்குளம் வயல் - விஸ்தீரணம் : 13.8844 ஹெக்டயார்ஸ்**

வடக்கு : துண்டு இல. 585, 584 மற்றும் பிரதேச சபை வீதி ; கிழக்கு : பிரதேச சபை வீதி, துண்டு இல. 588 மற்றும் அடிப்பாதை ; தெற்கு : துண்டு இல. 588, அடிப்பாதை மற்றும் வீதி (வீ.அ.அ.) ; மேற்கு : வீதி (வீ.அ.அ.), துண்டு இல. 585 மற்றும் 584.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

குறிப்பு இல. : 4/3/4/2013/டீ/130.
காணி எடுத்தல் உத். இல. : கேஎன்/எல்எல்ஆர்சீ/கேடீ/03.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2014.07.03.

08 - 278

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வட மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில், வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில், இல. ஜே/261, கோப்பாய் மத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவில், கோப்பாய் தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2013.05.21 ஆந் திகதிய வைஏ/கேபீவை/2013/103 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு "ஏ" எனக் காட்டப்பட்ட சுமார் 0.5089 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் :

01. **துண்டு "ஏ" - வலைப்பிட்டி - விஸ்தீரணம் : சுமார் 0.5089 ஹெக்டயார்**

வடக்கு : பிரதேச சபை வீதி மற்றும் ஒழுங்கை ; கிழக்கு : ஒழுங்கை, ஆறுமுகம் உதயராசா, ஆறுமுகம் ஆனந்தராசா ஆகியோர் உரிமை கோரும் வலைப்பிட்டி தோட்டம் ; தெற்கு : ஆறுமுகம் உதயராசா, ஆறுமுகம் ஆனந்தராசா ஆகியோர் உரிமை கோரும் வலைப்பிட்டி தோட்டம் மற்றும் பிரதேச சபை வீதி ; மேற்கு : பிரதேச சபை வீதி.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

குறிப்பு இல. : 4-3/4/2013/டீ/103.
பிரதேச செயலாளர் இல. : எல்டீடீ/டீஓ(ஜே)/எல்ஏ/கேஓபி/01.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2014.07.03.

08 - 279

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.